# சைவ நற்சிந்தனைகள்

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

# சைவ நற்சிந்தனைகள்

பண்டிதமணி
சி. கணபதிப்பிள்ளை அவர்கள்

குரும்பசிட்டி: சன்மார்க்கசபை

1959

சன்மார்க்க சபைக்குப் பெருந் தொண்டு புரிந்து இறைவனடி யெய்திய பெருமக் களுக்கு இந்நூல் சமர்ப்பிக்கப்படுகிறது.

பதிவுரிமை

திருமகள் அழுத்தகம், சுன்னுகம்

# முகவுரை

அறிவான் மிக்க பெரியார் ஒருவரைத் "தாங்கள் ஒரு நூல் எழுதலாகாதா? தங்களுடைய ஆன்ற அறிவு தங்களுடன் முற்றுவதா?" என்று வினவியபோது, "நூல் எழுதல் முடியலாம். அந்நூலுக்கு முகவுரைதான் எப்படி எழுதுவது என்பது தெரியவில்லை" என்று அப் பெரியார் சொன்னார்.

நூல் எழுதியது ஏன்? வெளியிடுவது ஏன்? என்ற வினாக்களுக்குத் தன்னை வஞ்சியாமல் விடை கூறுவது இக் கலியில் எளிது அன்று. அது நிற்க.

இப் புத்தகத்தில் தொகுக்கப்பட்ட சின்னஞ்சிறிய கட்டுரைகளிற் பெரும்பாலன வானொலியில் 'நற்சிந்தனை'ப் பிரிவிலும், ஏனையவை வருடாந்த வெளியீட்டு மலர்களிலும் அவ்வப் பகுதியாரின் தூண்டுதலால் வந்தவை; கால இடக் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டவை. இக் காரணங் களினாலே அநுபவ விளைவுகள் என்று சொல்லுதற்கு ஏலாதவைகள் இக் கட்டுரைகள். இது ஒருபுறம் இருக்க.

வானவெளியிலும் பத்திரிகைப் பரவையிலும் வெளி வருபவைகள் புத்தகவடிவு எடுக்கும்போது, விஷய அமைப்பிலும் பாஷை நடையிலும் மாற்றம் அடைய வேண்டும் என்பது எனது நிலையாய கருத்து. அக்கருத்தைத் திரு. கனக. செந்திநாதன் ஒப்புக்கொள்பவர் ஆயினும், 'பிறகு', 'பின்னை' என்ற வார்த்தைகளில் அவர் நம்பிக்கையில்லாதவர். ஆகையினாலே இக் கட்டுரைகள் பிறந்த தேகம் இருந்தபடி எவ்வித மாற்றமுமின்றி அவரின் முயற்சியால் சன்மார்க்கசபையினரால் வெளியிடப்பட் டிருக்கின்றன.

சைவ ஆசிரிய கலாசாலை,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம் — **சி. கணபதிப்பிள்ளை,**
20-3-59.

# பதிப்புரை

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்" என்பதைப் பிரதான குறிக்கோளாகக் கொண்டு, ஈழகேசரிப் பொன்னையா அவர்களாலும் பிறராலும் இருபத்தைந்து வருடங்களுக்கு முன் தாபிக்கப்பட்ட சன்மார்க்க சபை, மெய்ந்நெறியிலும், உலகியலிலும் இயன்ற நற்பணிகள் புரிந்து அதன் ஓர் அங்கமாகச் சிறந்த புத்தகங்களையும் — வெளியீடுகளையும் அவ்வப்போது வெளிவரச் செய்திருக்கிறது.

பெருமை தரும் சைவ *நற்சிந்தனைகள்* என்னும் இந்த வெளியீட்டையும் சமயவெளியீடு 6ஆவது புத்தகமாகச் சன்மார்க்க சபை வெளியிடுகிறது. சைவப் பேரறிஞர் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையவர்களின் சிந்தனையிலே உதித்த இந்த நன்முத்துக்களை' வெளியிடும் பேறு பெற்றமைக்காகச் சன்மார்க்கசபை பெருமிதங் கொள்ளுகிறது. சைவசித்தாந்த அடிப்படைக் கருத்துக்கள் இந் நாட்டிற் பரவவேண்டுமென்று தமது எழுத்தாலும் — பேச்சாலும் நற்றொண்டுகள் செய்துவரும் பண்டிதமணியவர்கள், இவற்றை வெளியிட உரிமை அளித்ததற்காகச் சபையினர் மிகுந்த கடன்மைப்பாடுடையவர்களாயிருக்கிறார்கள்.

இந்நூலை மிக மகிழ்வுடன் ஏற்று, உயரிய முறையில் அச்சிட்டு உதவிய, சுன்னாகம் திருமகள் அழுத்தகத்தாருக்குச் சபை நன்றி பாராட்டுகிறது.

**சன்மார்க்க சபையினர்,**

குரும்பசிட்டி,
யாழ்ப்பாணம்
23-3-59.

# சமயம்

நினைப்பு, மறப்பு, விழிப்பு, நித்திரை, பிறப்பு, இறப்பு முதலிய காரியங்கள் நமது வல்லமையைக் கடந்து நடக்கின்றன.

அக்காரியங்களை நடத்திவைக்கும் பொருள் எது? அப்பொருள் நமது வல்லமையைக் கடந்த பொருள்; கடவுள்.

கடவுளுக்கு வடிவம் உண்டா? உண்டு. அது இந்தக் கண்ணாற் காணமுடியாதது; சுத்த அறிவினாற் காணத்தக்கது. அதற்கு நீதி என்று பெயர்.

நீதி வெகு ஆழமானது; மிக மிக நீளமானது. 'பங்கயத் தயனு மா லறியா நீதி' என்பது மணிவாசகம். நீதியின் ஆழத்தையும் நீளத்தையும் காணுதற்குப் பிரம விஷ்ணுக்களுக்குக் கூடச் சுத்த அறிவு போதிய அளவுக்கு உண்டாகவில்லை.

நீதியை மறைக்குங் குற்றங்கள் இரண்டு. ஒன்று அறியாமை; மற்றது வஞ்சகம்.

அறியாமை பாவமன்று; முயற்சிக்குப் பயன் தாராது; அதனாற் குற்றம் எனப்படுகிறது.

வஞ்சகம் படுகுற்றம்; மகா குற்றம்; நரகத்துக்கு வித்து. அது அறிவு முனையை அழித்து, அந்தகாரம் செய்துகொண்டிருப்பது.

வழியில் ஒரு பொருளைக் கண்டு எடுக்கின்றோம். பொருளுக்குரியவர் இன்னாரென்றுந் தெரிகிறது. விசாரித்து நிச்சயஞ்செய்யப் போதிய வழிதுறைகளும் இருக்கின்றன. பொருளை அதற்கு உரியவரிடம் ஒப்பிப்பதே நீதி என்று அறிவு சொல்லுகின்றது. வஞ்சகம் அந்த அருமந்த அறிவை மழுக்கி மாயஞ் செய்துவிடுகின்றது.

இந்தக் கள்ள வஞ்சகந்தான் நமது பரம சத்துரு. அதனோடு சதா போர்தொடுத்துக்கொண்டே நாம் சாவ தானமாயிருக்கவேண்டும். வஞ்சகம் மனத்தை ஒரு கணத்திலே தன் வசப்படுத்திவிடும். நாம் அதனைச் சிறை மீட்டு அறிவு வசப்படுத்த வேண்டும். 'நீதி எது! எது!! எது!!!' என்ற விசாரந்தான் வஞ்சகத்தைக் கொல்லும் படை. அப்படையினாலே இச்சையை நேர்செய்து கொண்டால் அறியாமை மெல்ல மெல்ல நீங்கும். அறி யாமை நீங்கச் சுத்த அறிவு உதயமாகும். அந்தச் சூரியோதயத்திலே நீதியின் பிழம்பு ஒரு சாயலாகத் தோன்றத் தொடங்கும். அறிவுச் சூரியன் மேல் எழ எழ நீதியின் உண்மைத் தோற்றம் — கை கால் முதலிய அவயவங்கள் — காட்சியளிக்கும் ; அடிமுடி தோன்றும்.

நீதியை விசாரிப்பதிலே—விசாரித்து, அந்த நீதியிலே எவ்வித வஞ்சகத் தடையுமின்றி நிலைநிற்பதிலே — எவ னுக்குச் சதா பரிசுத்த விருப்பம் உண்டோ, அவன் சமயி.

அந்த விருப்பத்தை நூறுயிரம் கள்ளக் காரணங் கள் கற்பித்து எவன் வஞ்சிக்கின்றானோ, அவன் சமயி அல்லாதவன்.

முந்தியவன் அகச்சமயி; மற்றவன் புறச்சமயி.

அகச்சமயி சமயத்துக் குள்ளானவன்; புறச்சமயி சமயத்துக்குப் புறம்பானவன்.

நீதியை வஞ்சகமின்றி விசாரித்து விரும்புவது அகம். அதற்குச் சமயம் என்று பெயர்.

நீதிதான் கடவுளின் வடிவம். அதற்கு மற்றொரு பெயர் சிவம். சிவம் என்றால் நன்மை, மங்களம், நீதி என்று பொருள்.

எவன் நீதியோடு சம்பந்தப்படுகின்றானோ, அவன் சிவத்தோடு சம்பந்தப்படுகின்றான்.

சிவத்தோடு சம்பந்தப்படுகிறவனுக்குச் சைவன் என்று பெயர்.

சிவத்தோடு சம்பந்தப்பட்ட சமயம் சைவசமயம்.

***'மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம்'***

# அறிவு

அறிவு, அன்பு, அருள் என்னும் மூன்றும் அதிகாலைகள் தோறும் பெரிதுஞ் சிந்திக்கவேண்டியவைகள். இராத்திரியில் உறக்கத்துக்குப் போகும்போது அவைகளைப் பற்றிச் சற்றே சிந்தித்துக்கொண்டு உறங்கினால் அதிகாலையில் நித்திரை விட்டு எழும்பும்போது, அவை சிந்தனைக்கு வரும்.

அறிவு என்றால் என்ன? என்பது முதலிற் சிந்திக்க வேண்டியது. உயிர் அறிவுள்ள பொருள்; ஆனால், உதவியின்றித் தானாக ஒன்றையும் அறியமாட்டாது; கண்ணின்றி ஒன்றையும் பார்க்கமாட்டாது; காதின்றிக் கேட்கமாட்டாது. ஆகவே, உடம்பின் உதவி உயிருக்கு வேண்டியிருக்கிறது. இந்த உடம்பை உதவுவது எது? அதற்கு ஒளி என்று பெயர். உயிர் இயல்பாகவே அறியாமையோடு கூடியது. அதனால் உயிர், தான் தன்னையே இன்னார் என்று அறியாது. அப்படி அறியாமைக்கு இருள் என்று பெயர். இருளோடு கூடியிருப்பது போலவே உயிர் ஒளியோடுங் கூடியிருக்கின்றது.

"ஒளிக்கும் இருளுக்கும் ஒன்றே இடன்" என்று ஒரு மகான் கூறியிருக்கிறார். இங்கே ஒன்று என்பது உயிர். அது ஒளிக்கும் இருளுக்கும் இடனாயிருக்கின்றது. ஒளி கடவுள். இருளாகிய அறியாமை ஒரு நாளைக்கு உயிரை விட்டு நீங்கலாம். ஒளியாகிய கடவுள் எந்தக்காலத்திலாயினும் உயிரைவிட்டு நீங்காது. ஒளியாகிய கடவுள் உயிரறிவுள் அடங்கி, இருளால் மூடுண்டு கிடக்கின்றது. ஆனால், ஒளியை இருள் மூடுமா? உயிரறிவைத்தான் இருள் மூடமுடியும்.

கண்ணை மூடுவதால் சூரிய ஒளி மறைவதுபோல, இருள் உயிரை மூடுவதால் ஒளியாகிய கடவுள் மூடுண்டிருக்கின்றது. உண்மையிலே கடவுள் இருளால் மூடுண்டிருப்பதில்லை. இருள் மூடிய உயிருக்கு அதனால் மூடுண்ணாத கடவுள் சரீரத்தை உதவி, அதன் அறிவை விருத்தி செய்கின்றார். உயிர்களாகிய நாம் — நமது அறிவை, நம் அறிவுள் நீங்காதிருந்து, விருத்தி செய்கின்ற கடவுளை மறவாமல்—கடவுள் கருத்தறிந்து நமது அறிவை விருத்தி செய்யவேண்டும். கடவுள் கருத்தறிதற்குக் கடவுள் வழிநின்ற மகான்கள் நல்ல வழிகள் வகுத்திருக்கின்றார்கள். நல்வழி இருக்கிறது. நன்னெறி யிருக்கிறது. வாக்குண்டாம் இருக்கிறது. ஆத்திசூடிமுதல் வள்ளுவர்பரியந்தம் நல்ல வழிகள் வகுக்கப்பட்டிருக்கின்றன.

‘ புண்ணியம் ஆம்’ ‘ பாவம் போம் ’ என்பது ஔவையார் வாக்கு. புண்ணியம் செய்யத்தக்கது ; பாவம் விலக்கத்தக்கது என்பது கருத்து. ஒளியாகிய கடவுளின் உபகாரங்களினால், புண்ணியம் இது, பாவம் இது என்று நாம் அறிய வல்லவர்களாயிருக்கின்றோம். புண்ணியம் ஆராயப்படவேண்டியது. ‘ போம்பொழுது அருந்துணை புரிந்த புண்ணியம் ’ என்பது பெரியோர்கள் வாக்கு. புண்ணியத்தை ஆராய ஆராய அதில் நமக்கு ஒரு பற்று உண்டாகும். அது நல்லதே. அந்தப் பற்றுக்கு அன்பு என்று பெயர். அதே சமயத்திற் பாவத்தின் தீமைகளை ஆராய்தலினால், அதில் நமக்கு வெறுப்பு உண்டாகும். அதுவும் நல்லதே. பாவத்தில் வெறுப்பும் புண்ணியத்தில் அன்பும் உண்டாவது ஒரு நல்ல அறிகுறி. அன்பு வளர்க்கப்பட வேண்டியது. அன்பு வளர வளரப் பாவந் தேயும். பாவந் தேயப் புண்ணியம் மேலும் மேலும் வளர்ந்து அதில் அன்பு கனியும். அன்பு கனிந்த நிலையில் அருள் ஆகும். ‘ அருள் என்னும் அன்பு ஈன் குழவி ’ என்பது திருவள்ளுவர் வாக்கு.

# அன்பு

எப்பொருள் எத்தன்மைத்தாயினும், எப்பொருள் யார் யார்வாய்க் கேட்பினும், அப்பொருள் மெய்ப் பொருள் காண்ப தறிவு.

காணுகிற கேட்கிற பொருள்களை அப்படியே நம்பி விடக் கூடாது. அதே சமயத்தில் அவற்றைத் தள்ளிவிட வுங் கூடாது. கண்ட கேட்ட அப்பொருள்களை வைத்துக் கொண்டு அவை அவ்வாறு இருத்தற்கு மூலகாரணம் என்ன என்பது ஆராயப்பட வேண்டும்.

ஒருநாள் இராத்திரி ஒருவன் ஒரு தெருவில் 'பாம்பு' 'பாம்பு' என்று சொல்லிக்கொண்டு, பயந்து ஓடிவிட் டான். அவனுடன் கூடிவந்த மற்றொருவன், வெளிச் சத்தை உண்டாக்கி முன்னம் அவன் கண்டு பயந்த பாம்பைப் பார்த்தான். அந்தப் பாம்பு வைக்கோற்புரியா யிருந்தது. பாம்பாய்ப் பயப்படுத்திய வைக்கோற் புரியை அவன் எடுத்துச்சென்றான். இந்த வைக்கோற் புரிக் கதையிலிருந்து கண்டவைகளைக் கேட்டவைகளை ஆராய்ந்து தெளியவேண்டுமென்பது தெரிகின்றது.

*'ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்*
*வானம் நணிய துடைத்து'*

என்பது வள்ளுவர் வாக்கு, கண்ட கேட்ட காரியங்களை முதல் ஐயப்பட்டுப் பின் தெளிவடைய வேண்டும். அப்படி ஐயுற்றுத் தெளிந்தவர்களுக்கு வையகத்தின் சம்பவங்களிலும் பார்க்க, வானகத்துச் சம்பவங்களை அறிவது எளிதாயிருக்கும் என்பது வள்ளுவர் வாக்கின் கருத்து.

நாம் காணுகிற கேட்கிற பொருள்களின் மூலங்களே உண்மைகள்; நித்தியமானவைகள்; நன்மைகள். நன்மையும் உண்மையுமான மூல காரணங்களை ஆராய ஆராய அவற்றிலே நமக்கு அன்பு பெருகும்; உள்ளம் உருகும்; கண்ணீர் சொரியும்.

அன்புதான் உயிரை உருக்கி அழுக்கை அகற்றிச் சுடர்விட்டு ஒளிகாலும்படி செய்வது.

*'அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு*
*என்புதோல் போர்த்த உடம்பு'*

என்பது அருமையான திருக்குறள். இதிலே உயிர் நிலை என்றது உடம்பு. அது அன்பின் வழியதாய் அன்பைத் தன்னகத்தே உடையதா யிருக்கவேண்டும். அன்பு இல்லையேல் இந்த உடம்பு எலும்புகளைத் தோலால் மூடிக் கட்டின ஒரு வெறும் தசைப்பொதி யாய்ப் பிணமாய்விடும். மகான்கள் நமதுடம்பு வெறும் தசைப்பொதியான் நடைப்பிணமாகாமல் அன்பைச் சம்பாதித்தற்கு வழிசெய்திருக்கின்றார்கள். மாணிக்க வாசக சுவாமிகள் அருளிய வாசகம் அன்பு வாசகம்; அன்பால் ஆக்கப்பட்ட வாசகம். அன்பினால் உருகி உருகிப் பொழிந்த கண்ணீரே திருவாசகம்.

*'பால்நினைந் தூட்டும் தாயினும் சாலப்*
*பரிந்துநீ பாவியே னுடைய*
*ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி*
*உலப்பிலா ஆனந்த மாய*
*தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த*
*செல்வமே சிவபெரு மானே*
*யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்*
*எங்கெழுந் தருளுவ தினியே'*

என்ற திருவாசகத்தை நாடோறும் ஓதி உருகுவோமாக.

# அருள்

காணுகிற கேட்கிற பொருள்களின் மூல காரணங்களை விசாரிக்கிறதனாலே, நமக்கு உண்மை அறிவு உண்டாகிறது. உண்மை அறிவே நேசிக்கற்பாலது. நேசம் அன்பு. அன்பு பசைத்தன்மையானது. நாம் எந்தப் பொருளிலே அன்பு செய்கிறோமோ அந்தப் பொருளோடு நம்மை ஒட்டச்செய்துவிடுகிறது இந்த அன்பு.

முத்திரையின் புறத்திலே ஒரு பசை இருக்கிறது. அந்தப் பசை முத்திரையைக் கடித உறையில் ஒட்டச் செய்துவிடுகின்றது. முத்திரை கடித உறையில் ஒட்டி ஒன்றாய்விடுகிறது. ஒட்டச் செய்த பசை மறைந்துவிடுகிறது. பிறகு முத்திரை வேறு கடித உறை வேறு என்ற உணர்ச்சி இல்லாமற் போய்விடுகின்றது. பசை கடித உறையாய் மறைந்து, முத்திரையுங் கடித உறையாகும்படி செய்துவிட்டது.

அன்பு, முத்திரையின் புறத்துப் பசை போன்றது. சீவர்கள் முத்திரைகள் போன்றவைகள். திருவருள் கடித உறை போன்றது. சீவர்களாகிய முத்திரைகள், அன்பாகிய பசை கசிந்து, கண்ணீர்மல்கித் திருவருளில் ஒட்டிக்கொள்ள வேண்டும். சீவர்கள் அன்பு கசிந்து திருவருளில் ஒட்டிக்கொள்ளுமானால், சீவர்கள் திருவருள்மயமாய்த் திருவருளுக்கு இடமான சிவமாய் விடும். மகான்கள் அன்பைப் பெருக்கித் திருவருள் கனிந்து, சிவமாந் தன்மையை எய்துகின்றார்கள். அன்பு செய்யத்தக்கது திருவருள் ஒன்றே. அந்தத் திருவருள் தான் இந்தச் சரீரமாயும், உலகமாயும் விரிந்திருக்கிறது.

'இந்தப் பூமி சிவனுய்யக் கொள்கின்ற ஆறு' என்பது திருவாசகம். இந்தச் சரீரமும் ஒரு பூமியே. உயிர்கள் வசிக்கின்ற இந்த உடம்பாகிய பூமியும் முன்னிலையாய்க் கிடக்கின்ற பூமியும் திருவருள் தந்த உபகாரங்கள்; திருவருளை அடைதற்கு உதவியானவைகள்.

ஒரு முதலை, நரியின் காலென்று நம்பிப் புங்கம் வேரைக் கவ்வியது. இறுகக் கவ்வியதனால், முதலையின் உள் முரசில் இரத்தம் பெருகினது. முதலை அந்த இரத்தத்தை நரியின் காலிற் பெருகிய இரத்தமென்று சொல்லிச் சொல்லிச் சுவைத்தது. இந்தக் கதை பாலர்களின் பாலபாடத்தில் வருகின்றது. வளர்ந்த மனிதன், பாலபாடக் கதையை மறந்து, சேற்றிலே கிடக்கிற முதலைபோலப் **புங்கம்வேர் போன்ற** இந்த உலக சுகங்களையே கட்டித் தழுவிச் சுவைக்கிறான். அதனாலே கவலைகளைப் பெருக்குகிறான். உலக சுகங்களைத் தந்த, உலகத்தின் மூலகாரணமான திருவருளைச் சிந்திக்கின்றானில்லை. திருவருளே அன்பு செய்தற்குரியது. அன்பு கசிந்து திருவருளில் ஒட்டிக் கொண்டால், திருவருள் தன்பால் ஒட்டிய சீவர்களை எடுத்துச் சுமக்கும். கடித உறை செல்லும் இடமெல்லாம், அதில் ஒட்டிய முத்திரையும் செல்லுமாறுபோலத் திருவருள் விரியும் இடமெல்லாம், திருவருளில் ஒட்டிய சீவர்களும் விரியும். திருவருள் எல்லா உலகமும் ஆனால், சீவர்களும் எல்லா உலகமும் ஆகும். நாமெல்லாம் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கித் திருவருள் மயம் ஆவோம் ஆக.

# பொருள்

*'பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை
வழியெஞ்சல் எஞ்ஞான்று மில்'*

என்ற அருமைத் திருக்குறள் நாள்தோறுஞ் சிந்திக்க வேண்டியதொரு மந்திரம்.

ஒருவன் சம்பாதிக்கிற பொருள் அநுபவிக்கிற பொருள் 'பழியஞ்சிய' பொருளா யிருக்கவேண்டும். பழியஞ்சுதலாவது பழிக்கு அஞ்சுதல். நாம் தேடுகிற அநுபவிக்கிற பொருளால் மற்ற ஓர் உயிருக்குக் கேடு வராமலிருக்க வேண்டும். நமது பொருள் மற்ேறார் உயிரைக் கலக்கி, அதனைக் கண்ணீர் வடிக்கச் செய் யாததா யிருக்கவேண்டும். இது, பொருளை ஈட்டுப வர்கள் உறுதியாகக் கொள்ளவேண்டிய முதலாம் இலக்க விதி. மற்றோர் உயிர் கண்ணீர் பெருக்க, நாம் வலித்துத் தேடுவோம் ஆனால், அந்தப் பொருள் நமக்குப் பெரும் நட்டத்தை விளைக்கும். அப்படிப்பட்ட பொருள், நம்மிடம் வருமானால், அது சிறிதுகாலம் நம் மிடம் இருந்து பெரிய பகட்டுக்கள் செய்துவிட்டு, மெல்ல மெல்ல நம்மிடம் முன்னமே யிருந்த பொருள் களையும் கொளுவிக்கொண்டு ஒருநாளைக்குப் போய் விடும்; நம்மிடம் மூதேவியைக் குடியிருக்கச் செய்து விடும். 'அழக் கொண்ட எல்லாம் அழப் போம்.' பிறர் அழ அழ நாம் சம்பாதித்த பொருள்கள், ஒருநாளைக்கு நாம் விம்மி விம்மி யழ, நம்மிடம் முன்னிருந்த பொருள்களையும் அள்ளிக்கொண்டு போய்விடும். ஆகவே, பொருளை ஈட்டும்போது பழிக்கஞ்சி ஈட்ட வேண்டும். இது பொருளாதார சாத்திரத்தின் முதல் விதி. இனி இரண்டாவது 'பாத்தூண்'. 'பாத்தூண்' என்பதன் பொருள் பகுத்துண்டல்.

நல்வழியாற் பொருளைத் தேடவேண்டும். அவ்வாறு தேடிய பொருளை அநுபவிக்கும்போது பகுத்து அநுபவிக்க வேண்டும்.

*'யாவர்க்குமாம் உண்ணும்போ தொரு கைப்பிடி*

என்பது திருமூலர் அருளிய திருமந்திரம். நமக்குக் கடவுள் இரங்கித் தந்த பொருளை நாமே விழுங்கிவிடக் கூடாது. பசிக்கிறவர்களுக்கு — உதவவேண்டியவர்களுக்கு — உதவி மிகுதியையே நாம் உண்ணவேண்டும். கொடுக்கவேண்டியவர்களுக்குக் கொடுத்து மிகுதியாயிருப்பதற்கு 'மிச்சில்' என்று பெயர். பொருள் சம்பாதித்தவன் அநுபவிக்கவேண்டிய பொருள் மிச்சிலாயிருக்கவேண்டும்.

*'வித்து மிடல்வேண்டுங் கொல்லோ விருந்தோம்பி*
*மிச்சில் மிசைவான் புலம்'*

என்பது திருவள்ளுவர் அருளிய ஔஷதம். விருந்தினர்களை உபசரித்து மிகுதியாகிய மிச்சிலை உண்ணுகிறவனுடைய விளைபுலத்துக்கு வித்து வேண்டாம். வித்தை வித்தாமலே அவனுடைய விளைபுலம் விளைவைச் செய்யும் என்பது அந்த வேதத்தின் கருத்து.

*'அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்*
*பெற்றான் பொருள்வைப் புழி'*

என்பது மற்றொரு வேதவாக்கு.

பொருள் பெருக்க எண்ணுகிறவர்கள், அந்தப் பொருள் மறுமையிலும் தமக்கு வந்துதவவேண்டுமென்று விரும்பினால், கிடைத்த பொருளை வறியவர்களின் அறிவை அழிக்கின்ற பசியாகிய நெருப்பில் ஓமம் செய்து, அவர்கள் வயிற்றிலே சேமிக்க வேண்டும். அப்படிச் சேமித்த சேமநிதியை எந்தக் குளத்திலேயும் எடுக்கலாம். கைந்நீட்ட வரும்.

# ஊழ்

திருவள்ளுவர் குறளிலே முதலில் உள்ளது அறத்துப்பால். அறத்துப்பாலின் இறுதி அதிகாரம் ஊழ். ஊழென்ருல் விதி. விதியாகிய ஊழ், ஆகூழ் போகூழ் என இரண்டு வகைப்படும். ஆகூழ் நன்மை ஆதற்குரிய ஊழ் ; போகூழ் எல்லாம் போதற்குரிய ஊழ். ஆகூழில் எண்ணிய கருமங்கள் எல்லாம் எண்ணியபடியே முற்றும். 'ஆங்காலம் மெய்வருந்த வேண்டா' என்பது ஔவையார் வாக்கு. இருந்தபடி இருக்க எல்லாம் வலிய வந்து வாய்க்கும்.

ஆகூழ் நடக்கிற ஆங்காலத்திலே, காற்றடிக்கிற பக்கமாக நடக்கிறது போலே காரியங்கள் எளிதிற் சித்திக்கும். போங்காலம் பெரிய பிரசண்டமாருதத்தை எதிர்த்துச் செல்வதா யிருக்கும்.

ஒன்று செய்ய விரும்புகிறவன் முதலில் தனது ஊழ் என்ன என்று விசாரிக்கவேண்டும் ; ஆகூழா? போகூழா? என்று நிச்சயிக்கவேண்டும். வேதத்தின் அங்கமான சாத்திரங்களுள் சோதிடம் ஒன்று. அந்தச் சோதிடம் ஒவ்வொருவருக்கும் உரிய ஊழைச் சொல் லும். இந்த ஊழ் நமது சம்பாத்தியமே. நாம் சென்ற பிறப்புக்களிலும், எடுத்த இந்தப் பிறப்பிலும் எத் தனையோ முயற்சிகள் செய்தோம்; செய்கின்ருேம். முயற்சிகளில் நன்மையும் உண்டு ; தீமையும் உண்டு. நன்மை தீமைகளே ஊழாய் விளைந்து திரண்டிருக்கின் றன. நெல் விதைத்தவனுக்கு, நெல் விளைவு அநுபவத் துக்கு வருவதுபோல, நாம் விதைத்த நன்மை தீமைக

ளும் விளைந்து ஊழாய் நமது அநுபவத்துக்கு வருகின்றன. நன்மையின் விளைவான ஆகூழை அநுபவிக்கும்போது சந்தோஷப்படுகிறோம். போகூழில் துக்கப்படுகிறோம். பெரியோர்கள் போகூழில் துக்கப்பட்டுக்கொண்டு, சோம்பிக்கிடப்பதில்லை. ஊழ் நமது சம்பாத்தியமே என்பதை அவர்கள் அறிவார்கள். போகூழையும் வெறுப்பின்றி அநுபவிப்பார்கள். அப்படி அநுபவிக்கும்போதே, அதை எதிர்த்து வெல்லுதற்கும் முயற்சி செய்வார்கள். ஊழைச் சிருட்டித்தவர்கள் நாங்களே. நாங்கள் சிருட்டித்த ஊழை வெல்லுதற்கும் எங்களிடம் வல்லமை உண்டு. ஆகூழில் ஒரு முயற்சியைச் செய்தற்குரிய வல்லமையிலும் போகூழில் ஒரு முயற்சி செய்தற்கு நூறுமடங்கு வல்லமை வேண்டும். ஊழை அறிந்த பெரியோர்கள், ஆகூழ்காலத்தில் சந்தோஷப்பட்டு, ஆரவாரஞ் செய்து, வல்லமைகளை வீணாக்காமல், சேகரித்து வைத்துக்கொள்ளுவார்கள். அப்படிச் சேகரித்த வல்லமைகளைப் போகூழ் காலத்தில் உபயோகித்துப் போகூழை வென்றுவிடுவார்கள். சாவித்திரியும் மார்க்கண்டேயரும் அதற்கு உதாரணம்.

ஊழ் அறத்தின் மூலவேர். அறஞ்செய விரும்புபவர்கள், அறஞ்செய்ய விரும்புகின்ற தமது ஊழையும், ஆருடைய நன்மைக்குச் செய்யப்போகிறோமோ அவர்களுடைய ஊழையும் முதலில் விசாரித்துக்கொள்ள வேண்டும். ஊழை விசாரியாமற் செய்யுஞ் செயல்கள், நோயை விசாரியாமற் செய்யும் வைத்தியம்போல வீண் செயல்களாய் முடியும்.

'அரன்றன்பாதம் மறந்து செய் அறங்களெல்லாம் வீண் செயல்' என்பது சிவஞானசித்தியார். அரன்றன் பாதந்தான் ஊழை நடத்துவது. அதனை மறவாமை யாவது, ஊழ் இருந்தபடியை உணர்ந்து, திருவருளின் குறிப்பின்வழி நடத்தல்.

# நீதி

'சாதி இரண்டொழிய வேறில்லை' என்கின்றார் ஒளவைப்பிராட்டியார். ஒன்று நீதிச்சாதி, மற்றது அநீதிச் சாதி. நமக்கு அறிவு இருக்கிறது; அதனோடுகூட ஆசையும் இருக்கிறது. அறிவு நீதிச்சாதியைச் சேர்ந் தது; தெய்வத்தன்மை யுள்ளது. ஆசை அநீதிச்சாதி யைச் சேர்ந்தது; அழுக்கோடு கூடியது. ஆசையைச் சுத்தப்படுத்தி, அறிவின் வழிப்படுத்த வேண்டும். ஆசையை அறிவின்வழி நடத்துகிறவர்கள் நீதிச்சாதியை அடைகின்றார்கள். அவர்களே சாதிமான்கள்.

நாம் தெருவில் நடந்து செல்லுகின்றோம். வழி யிலே ஒரு பணப் பை அகப்படுகின்றது. அந்தப் பணம் யாரோ ஒரு மனிதன் வெயர்வையொழுகச் சம்பாதித்த தாகலாம்; அந்த மனிதன் தானும் தன் மனைவிமக்க ளும் உண்டு உடுத்து வாழ்வதற்குச் சிறிது சிறிதாகச் சேர்த்ததாகலாம். அன்று தவறிய அந்தப் பணப் பை நம்மிடம் அகப்பட்டுக்கொண்டது. அகப்பட்டதும் அறி வுக்கும் ஆசைக்கும் போர் மூளுகின்றது. அறிவு, "ஐயோ இந்தப் பணம் எந்த ஏழையின் சம்பாத்தி யமோ ? இதை நாம் தீண்டலாமா ? இதை இதற்குரியவ ரிடஞ் சேர்க்கவேண்டுமே" என்று நீதி சொல்லும். ஆனால், ஆசை என்ன சொல்லும் என்பதை விவ ரிக்க வேண்டியதில்லை. அது ஆகாயக்கோட்டை கட்டும்; நமது அதிர்ஷ்டத்தை வியக்கும். வியாபாரத் துறைக ளிலும் குதிரைப்பந்தயங்களிலும் இந்த ஆசையின் முழு வடிவங்களையுங் காணலாம். இந்த ஆசை வழிப் பட்டவர்கள் அறிவை அழிக்கின்றார்கள்; அநீதிச் சாதியை அடைகின்றார்கள்.

நீதி, கடவுளின் வடிவு, ‘ பங்கயத் தயனும் மாலும் அறியாத நீதியே ’ என்று கடவுளைத் துதிக்கின்றது திருவாசகம். நீதியைப் போற்ருதவர்கள் கடவுளின் வடிவத்தை நிந்திக்கிருர்கள். அறிவாளிகளின் கையில் ‘ நிதி ’ அகப்பட்டால் அவர்கள் ‘ நி ’ என்ற குற்றெழுத்தை நீட்டி ‘ நீதி ’ ஆக்குகின்ருர்கள். அவர்கள் நீதியைக் குறுக்கி நிதி செய்வதில்லை ; நீதியை விற்று நிதி வாங்குவதில்லை.

தேசம் வறுமை அடைகின்ற காலத்திலே வள்ளல்களிடம் நிதி சேரும். ஆனுல், அவர்கள் நிதியைக் குறிய வடிவில் வைத்திருப்பதில்லை. நிதியை நீளச் செய்து, நீதி ஆக்கிவிடுவார்கள்.

நீதி தெரியாதவர்களிடம் நிதி சேரும் ஆனுல், அந்த நிதி அவர்களைக் கெடுத்துவிடும். அவர்கள் வழக்குக்களிலும் கொலை முதலிய துட்டச் செயல்களிலும் நிதியைச் செலவு செய்து இம்மை மறுமை இரண்டையும் இழந்து நரகத்துக்கு ஆளாகின்ருர்கள்.

நிதியை நீதி செய்தவர்களின் சந்ததியிலே ஒரு காந்தி, ஒரு நேரு வந்து பிறக்கலாம். அவர்களுடைய சந்ததியால் உலகம் தழைக்கும். ஒருவன் தன் சந்ததிக்குச் சம்பாதித்து வைக்கும் பொக்கிஷம் வெறும் ‘ நிதி ’யன்று ; நீதி.

நிதியை நீட்டி நீதி செய்பவர்கள், சீவன் குறுகிச் சிவன் ஆவார்கள். நீதியோடு சம்பந்தஞ் செய்கிறவர்கள், சிவத்தோடு சம்பந்தஞ் செய்கிருர்கள். அவர்களே சைவர்கள். நீதிக்குச் சைவம் என்பது மற்றொரு பெயர்.

*‘ மேன்மைகொள் சைவ நீதி*
*விளங்குக உலக மெல்லாம் ’.*

# கலை

கலை என்றால் என்ன? சற்றே சிந்திப்போம்.

உலகத்தின் வியத்தகு தோற்றங்களைக் கவிஞர்கள் காவியங்களிலும், ஓவியர்கள் ஓவியங்களிலும், சிற்பிகள் சிலைகளிலும் அமைக்க முயலுகின்றார்கள். அந்த முயற்சிகள் முற்றுப்பெறாமல் வளர்ந்துகொண்டிருக்கின்றன. அந்த வளர்ச்சிகள் கலைச்சமுத்திரத்தில் எழுகின்ற அலைகளாயிருக்கும்.

மலை அடுக்கங்கள் — அருவிகளின் வீழ்ச்சிகள் — கடற் பரப்புக்கள் — வான வளைவுகள் — சந்திர சூரிய உதய அஸ்தமனங்கள் — சோலைகள் — என்றின்னோரன்னவைகளை நேரிற் கண்டு பலர் களிக்கின்றார்கள்; இன்பந் துய்க்கின்றார்கள்.

இங்ஙனமாகக் கவிஞர்கள்முதல் நேரிற்கண்டு களிப்பவர்பரியந்தம், இங்கே குறிப்பிட்டவர்களெல்லாம், கலைஅநுபவம் படைத்த கலைஞர்கள் என்று கருதப்படுகின்றார்கள்; மனச்சாந்தி படைத்தவர்கள் என்று நினைக்கப்படுகின்றார்கள்.

கலைஞர்கள் மனிதர்களுக்குள் அதிமனிதர்கள்; மதிப்புக்குரியவர்கள். ஆனால், அவர்களிடமுங் கவலை குடிகொண்டுவிடுகின்றது. கலைஞர்கள் தம்பால் அணுகுகின்றவர்களைத் தமது கலைப்பொக்கிஷங்களாற் களிக்க வைக்கின்றார்கள். ஆயினும், சிலசமயங்களில், கலைஞர்களுங் கவலைகொள்ளுகின்றார்கள். ஒரு தந்திக்காரன் வேகமாக வருகின்றான். அவனைக் கண்டதுங் கலைஞர்களுங் கலங்கிவிடுகின்றார்கள். கலையுங் கவலைக்கிடமானதா? உண்மைக் கலை என்றாலென்ன?

நமது நிழல் வளர்ந்து நீளுகின்றது. பின் அவ்வாறே குறைந்து ஒடுங்குகின்றது. குறிப்பிட்ட காலத்தில் எல்லாருடைய நிழலும் வளர்ச்சியிலும் ஒடுக்கத்திலும் ஓர் அளவைக் கொண்டிருக்கிறது. நீண்ட மனிதன் தன் நிழல் தனது அடியால் பத்தடி என்கின்றான். அதே சமயம் குறுகிய மனிதனும் தன்னிழல் தன்னடியால் பத்தடி என்கின்றான்

கலை என்ற தத்துவத்துக்கு மேலே காலம் நியதி என்ற இருதத்துவங்கள் இருக்கின்றன. குறிப்பிட்ட காலத்தில் ஒரு நியதிக்குட்பட்டு நிழல் வளர்வதும் தேய்வதும் போலவே பல்வேறு விசித்திரமான உலகத் தோற்றமும், ஒரு நியதிக்குட்பட்டே வளருகின்றது; ஒடுங்குகின்றது. அந்த நியதி யாது? அதுதான் திருவருட்குறிப்பு; சிவசத்தியின் திருவிளையாட்டு. அது நீதிமயமானது. நீதிமயமான நியதிப்படி உலகந் தோன்றி நின்று ஒடுங்குகின்றது. நியதியான திருவருட்குறிப்பை உணர்ந்தவர்கள், உலகத்தோற்றத்தைக் கண்டு மகிழ்வது போலவே உலகம் ஒடுங்கும் முறையில் ஒடுங்குவதையுங் கண்டு களிக்கின்றார்கள்; நீதியாகிய நியதியை வியக்கின்றார்கள்.

நியதியை உணர்ந்தவர்கள் கல்யாணவீடுபோலவே அந்தியகாலச் சடங்குகளையுங் காணுகின்றார்கள். அபிமந்யுவுடன் இறக்க முயல்கின்றான் அவன் தந்தையாகிய அருச்சுனன்; மாமனான கண்ணன் அப்படிச் செய்யவில்லை. அபிமந்யுவின் தோற்ற வளர்ச்சிகளைக் கண்டு மகிழ்ந்ததுபோலவே, அபிமந்யுவின் ஒடுக்கத்துக்கும் மகிழ்கின்றான் கண்ணன். அபிமந்யு இந்த உலகபந்தங்களை உதறிக்கொண்டு உயர்நிலை உறுவதைக் கண்டு களிகூருகின்றான் அந்தக் கண்ணன். கண்ணன் நியதி என்ற தத்துவத்தை நன்கு தெரிந்தவன்.

கண்ணீர் வடித்துக் கலங்குகின்றான் அர்ச்சுனன். கண்ணில் நீரே வாராமல், கலக்கமின்றி இருக்கின்றான் கண்ணன். இந்த இருவரில் யாவன் பரிபூரண கலைஞன்! கலை என்றால் என்ன!

# உலகம்

உலகம் என்ற சொல்லுக்கு இரண்டு பொருள்கள் வழங்குகின்றன. ஒருபொருள் உயர்ந்தோர்; மற்றப் பொருள் உலகத்திலுள்ள சாதாரண மக்கள்.

'உலகத்தோடு ஒட்ட ஒழுகல்' வேண்டுமென்கிறார் திருவள்ளுவநாயனார். நாயனார் குறிப்பிட்ட உலகம் எது? சிந்திப்போமாக. நம்முடைய ஒழுக்கம் எப்படிப்பட்டதாயிருக்கவேண்டும்? நாம் யாருடைய ஒழுக்கத்தைப் பார்த்து ஒழுகவேண்டும்? இந்த வினாக்களுக்கு விடை வெளிப்படை. நாம் உயர்ந்தோர்களையே பின்பற்றவேண்டும். அவர்களுடைய அடிச்சுவட்டையே தொடரவேண்டும். திருவள்ளுவர், ஔவையார்போன்ற சான்றோர்களின் வாக்குக்களையே நோக்கி நடக்க வேண்டும். அவர்கள் நடந்த வழியில் நடக்கவேண்டும். அவர்களோடு ஒட்டவேண்டும். அவர்கள் ஒழுக்கத்தோடு ஒட்டிக்கொள்ளும்படி ஒழுகவேண்டும்.

ஒருவன் உயர்ந்தோர்களைப் பின்பற்றி, அவர்கள் கொண்ட ஒழுக்கங்களைத் தானும் கைக்கொண்டு ஒழுகுகின்றான் என்று வைத்துக்கொள்ளுவோம். அப்படிப்பட்டவன் சாதாரண உலக மக்களோடு எவ்வாறு ஒழுக வேண்டும்? அவர்களோடு ஒட்டலாமா? என்பது பெரிய கேள்வி; விடுவிக்கவேண்டிய கேள்வி.

'உலகத்தோடு ஒட்ட ஒழுகல்' என்ற தொடரிலே, சாதாரண உலக மக்களோடு ஒருவன் எப்படி ஒழுக வேண்டும் என்பதற்கும் வழிவகுத்திருக்கின்றார் திருவள்ளுவநாயனார். அத் தொடரின் பொருளை மற்றொரு பிரகாரம் நோக்குவோம். உலகத்தோடு – சாதாரண மக்களோடு, அவர்கள் உன்னைத் தொடர்ந்துவந்தால்—

உன்னோடு ஒட்டிக்கொள்ள அந்தச் சாதாரண மக்கள் முயன்றால், 'ஒட்ட' — அவர்கள் உன்னோடு ஒட்டிக் கொள்ளும்படி, உன் ஒழுகலாறுகளை அவர்கள் கைப் பற்றிக்கொள்ளும்படி, அவர்களை உதறித் தள்ளாமல், 'ஒழுகல்' - நீ ஒழுகுதலைச் செய்.

நீ எப்படி உயர்ந்தோர்களோடு ஒட்டிக்கொள்ள முயலுகின்றாயோ, அவ்வாறே சாதாரண மக்களும் உன்னோடு ஒட்டிக்கொள்ள முயல்வார்கள். அது நீதி.

சாதாரண உலக மக்கள் உன்னொழுக்கத்தைத் தொடர முயலும்போது நீ அதற்கு இடங்கொடுக்க வேண்டும்.

முத்திரை தன் முதுகுப்புறத்திலே பசை வைத்திருக்கின்றது. தபாலுறை அந்தப் பசையைப் பற்றிக் கொண்டு, முத்திரையோடு ஒட்டுண்டு, விலைமதிப்புடையதாகின்றது. முத்திரை திரும்பிநின்று, முகப் பக்கத்தால், உறையில் ஒட்டுவதில்லை. அப்படித் திரும்பி முகம் குப்புறக் கவிழ்ந்து ஒட்டுமானால் அது தன் விலையை இழந்துவிடும். உறையின் விலையே முத்திரையின் விலையுமாய்விடும்.

முத்திரையின் முதுகுப் பசைபோல் அன்புப் பசை ஒருவனுக்குப் பின்புறத்திலுங் கசிய வேண்டும். அந்தக் கசிவு சாதாரண மக்கள் ஒட்டிக்கொள்ளுதற்கு வசதியளிப்பதாயு மிருக்கவேண்டும். சாதாரண மக்களைத் திரும்பிநின்று ஒட்டுதல் கூடாது. ஒருவன் சாதாரண மக்களை வலிந்து தொடர்ந்தால், தலைகவிழ்ந்தொட்டிய முத்திரை போன்றவனாய், அவன் தன் விலையை இழந்துவிடுகின்றான். ஆகையால், மனிதனே, நீ உயர்ந்தோரை ஒட்டி ஒழுகு; சாதாரண மக்கள் உன்னை ஒட்டி ஒழுக இடங் கொடு. நீ உன் விலையை இழந்து விடாதே. நீ சான்றோரினத்திரு. அப்படி யிருப்பாயானால், சாதாரண மக்களுக்கும் நீ பயன்படுவாய்.

# பற்றுக்கள்

மனிதனை இயமன் கொல்லுவதில்லை. மனிதன் தன்னைத்தானே கொல்லுகின்றான். பற்றுக்கள் மனிதனைக் கொல்லுகின்றன. பற்றுக்கள் எப்படி மனிதனைப் பற்றிக்கொண்டன என்பதை ஆராய்வதிற் பயனில்லை. மனிதன் எப்பொழுது உலகத்தில் தோன்றினானோ, அப்பொழுதே அவனுடன் பற்றுக்கள் தோன்றி வளருகின்றன. பற்றுக்களுக்கு ஆசை என்பது மற்றொரு பெயர். 'ஆசைக்கோரளவில்லை' என்பது தாயுமானவர் வாக்கு. ஆசையை அடக்குவது அரிது. 'அடக்கடக்கென்பர் அறிவிலார்.' ஆசைகள் தாமே அடங்குதற்கு உபாயஞ் செய்தல் வேண்டும்.

முதலாவது உபாயத்தைத் திருவள்ளுவர் சொல்லித் தருகின்றார். அந்த உபாயமாவது,

*'தன்னைத்தான் காதல னாயின் எனைத்தொன்றுந்*
*துன்னற்க தீவினைப் பால்'*

என்பது. ஒருவன் தன்னிடத்திலே தான் பற்றுள்ளவனாயிருக்கவேண்டும். அப்படித் தன்னிடத்திலே தான் பற்றுள்ளவன் ஆனால், அவன், எத்துணைச் சிறிய தொன்றாயினுந் தீமையைப் பிறர்க்குச் செய்யாதொழிக என்கின்றார் திருவள்ளுவநாயனார்.

'நீ உன்னிடத்திலே பற்றுள்ளவனாயிரு' என்ற போதனையை யாவரும் ஏற்றுக்கொள்ளுவர். அதனைத் தானே அநுட்டித்துக்கொண்டு வருகின்றோம் என்றுஞ் சொல்லுவார்கள். அப்படிச் சொல்லுகிறவர்களைத் திருவள்ளுவர் நோக்கி, நீங்கள் உங்களிற் பற்றுள்ளவர்களானால், பிற உயிர்க்கு எள்ளளவேனுந் தீமை செய்ய முடியாதென்கின்றார். பிற உயிர்க்கு எவன் தீமை செய்கின்றானோ, அவன் தன்னிடத்திலே தனக்குப் பற்றில்லாதவன் என்பது திருவள்ளுவர் கருத்து. எவன் பிற உயிர்க்குத் தீமை செய்கின்றானோ, அவன் தனக்கே

தீமை செய்கின்றான். ஆகவே, நாம் நம் நன்மையின் பொருட்டாகவே, பிற உயிர்க்குத் தீங்கு சிறிதும் விளையாமல், நாம் விரும்பிய பற்றுக்களை அநுபவிப்பதென்று நியந்தனை செய்துகொள்ள வேண்டும். மனமே, நீ விரும்பும் பற்றுக்களை அநுபவி ; நன்றாக அநுபவி. இரண்டாம் உயிர்க்கு அதனால் தீங்கு வரக்கூடாது. பிற உயிர்க்குத் தீங்கு செய்யாமை பெரிய நீதி. அந்த நீதியை மனம் ஒத்துக்கொள்ளும்படி, கணந்தோறும் சந்தர்ப்பங்கள்தோறும் ஞாபகப்படுத்திக்கொள்ள வேண்டும். மற்றொரு உயிர் நம்மால் துன்பப்பட்டு ஒரு மூச்சு விட்டாலும், அந்த மூச்சு நமது குடியை எரித்துச் சாம்பலாக்கிவிடும் என்பது எப்பொழுதும் ஞாபகத்திலிருக்கவேண்டும். எங்கும் எழுதித் தூக்கவேண்டும். ‘ஏழை யழுத கண்ணீர் கூரிய வாள்’ என்பதை நடந்த சம்பவங்களிலே இதிகாசக் கதைகளிலே கண்டுகொள்ள வேண்டும்.

இவ்வாறு பழிக்கஞ்சி ஒருவன் பற்றுக்களை அநுபவிப்பானானால், அவன் செய்யும் வினைகள் எல்லாம் தீவினைகள் ஆகாமல் நல்வினைகள் ஆகும்.

மனிதன் செயல்களை எல்லாம் என்றைக்கு நல்வினைகள் ஆக்குகின்றானோ, அன்றைக்குத்தான் அவன் உண்மை மனிதன் ஆகின்றான்.

அப்படிப்பட்ட மனிதன் நல்வினைகளும் பற்றுக்களே என்பதை மெல்ல மெல்லச் சிந்திப்பான். நல்வினைகளாற் சம்பாதிக்கும் சுவர்க்கம் முதலிய புண்ணிய உலகங்களும் நிலையில்லாதவை என்பதை ஒருநாளைக்கு உணர்வான். அந்த உணர்ச்சி அவனுக்கு மோக்ஷத்தை நல்கும். மனிதன் தொடக்கத்தில்

*‘தன்னைத்தான் காதல னாயின் எனைத்தொன்றுந்*
*துன்னற்க தீவினைப் பால்’*

என்ற அருமை மந்திரத்தையே பின்பற்றக் கடவன்.

# உழைப்பு

*"தெண்ணீ ரடுபுற்கை யாயினுந் தாள்தந்தது
உண்ணலி னூங்கினிய தில்"*

என்பது திருவள்ளுவர் வாக்கு. தாள்தந்தது - நீதியான தனது சொந்த முயற்சியினால் வந்தது, தெண்ணீர் அடு புற்கையாயினும் - தெளிந்த நீரையே மிகுதியும் விட்டுச் சமைத்த கஞ்சியாயிருந்தாலும், அந்தக் கஞ்சியை உண்டு திருப்தியடைதல் ஒருவனுக்கு நல்லது.

'தாள்தந்தது உண்ணலின் ஊங்கு இனியது இல்' தாள் - முயற்சி. தன் சொந்த முயற்சியால் வந்ததை உண்ணுதலினும் பார்க்க இனிய உணவு — நன்மை பயக்கத்தக்க உணவு — பிறிதொன்றும் இல்லை.

*"அருளொடும் அன்பொடும் வாராப் பொருளாக்கம்
புல்லார் புரள விடல்"*

என்பது மற்றொரு அருமைத் திருக்குறள். அருளாகிய நீதிக்கும், தயை ஆகிய அன்புக்கும் மாறாக ஒரு பொருள் வருமானால், அந்தப் பொருளைக் கையினாலே தீண்டுதலும் ஆகாது, என்பது இத்திருக்குறளின் கருத்து.

வந்த வெள்ளம் நின்ற வெள்ளத்தையுங் கொண்டு போவதுபோல அநீதியான வழியிலே வருகிற பொருள், ஒருவனிடம் இருக்கிற புண்ணியத்தையும் அழித்துக் கொண்டு போய்விடும். 'அழக் கொண்ட எல்லாம் அழப் போம்.' பிறர் அழ அழச் சம்பாதித்த பொருள், பிறகு நாம் அழ அழ நம்மிடம் இருந்த பொருளையும் அள்ளிக்கொண்டு போய்விடும்.

நாம் அனுபவிக்கும் பொருள் இம்மையிலும் மறுமையிலும் நமக்கு நன்மை பயக்கவேண்டும்; நமது சந்ததியை உய்யவைக்க வேண்டும்.

பொருள்கள் அனைத்திலும் உழவினாலே உடல் வருந்திச் சம்பாதித்த பொருளே உண்ணத்தக்க உறுதிப் பொருள் என்று உண்மை ஞானிகள் கண்டு நமக்கு உபதேசித்திருக்கின்றார்கள்.

வேதம் ‘ அன்னத்தை அறி ’ என்கின்றது. நுகரப் படும் பொருள் தூய்தாக இருக்கவேண்டும் என்பதே அதன் கருத்து. தூய்மையில்லாத உணவை உண் டால்—அறமல்லாத வழியில் வந்த பொருளை நுகர்ந் தால்—அப்படிப்பட்ட உணவு ஞானத்தை அழித்து விடும். அறிவாளிகள் உழுதுண்டு வாழ்தலை மிகுத்துப் பாராட்டியதன் காரணம் பெரிதுஞ் சிந்திக்கற்பாலது. அறிவு பயன்படுதற்கு அப்படியான வாழ்க்கைதான் உபயோகமானது.

கல்வியினாலாய அறிவு விருத்திகள் இப்பொழுது உத்தியோகங்களுக்கு அர்ப்பணஞ் செய்யப்படுகின் றன. யோசித்துப் பார்த்தால் உத்தியோக வருமானம் வயிற்றை வளரச்செய்வதற்கன்றி வேறு எந்த வளர்ச் சிக்கும் உதவாது. உத்தியோக வருமானத்தால் உண் ணும் ஊண் தொழுதூண் என்பது வெளிப்படை. அறிவைக் கொலைசெய்து உண்ணுகிற ஊண் ஒன்று இருந்தால், அதுதான் உத்தியோக ஊணாய் முடிந்தது. சிந்திக்கக்கூடியவர்கள் இனித் தமது சந்ததியாவது தப்பி உய்தற்கு வழிகாணவேண்டும். சந்ததியை ஆற்றங்கரையில் மரம்போல வாழும்படி வைப்பது பெரிய பாவம்.

“ *இலம்என் றசைஇ இருப்பாரைக் காணின்*
*நிலம்என்னும் நல்லாள் நகும்* ”

என்பது மற்றொரு தெய்வக் குறள். நாம் வறுமைப்பட்டுப் போனோம் என்று சொல்லுகிற சோம்பர்களைப் பார்த்து நிலம் என்கின்ற பெண் சிரிக்கின்றாளென்பது இக் குறளின் கருத்து. ‘ நல்லாள் ’ என்ற பெயர் நிலத்துக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றது. பூமிதேவி நல்லவள். அவள் எங்கள் தாய். அவள் எல்லாரையுந் தாங்கு பவள். மனிதனே நீ, ‘ பூமி திருத்தி யுண்.’

# மெய்கண்டார்

காடுகளும் சிறு சிறு மலைகளும் செறிந்த ஓர் இடத்திலே, அங்கும் இங்கும் சிதறுண்டு கிடக்கின்ற பல சிறு கிராமங்களுக்கு மத்தியிலே, யானைப்பாகன் ஒருவன் ஒரு பெரிய யானையைக் கொண்டுவந்து நிறுத்தினான். அந்த யானையினுடைய ஒரு காலின் பொய்த் தோற்றத்தை மாத்திரம் தூரத்திலிருந்து கண்ட ஒரு கிராமத்தவர்கள் 'அங்கே ஒரு உரல் நிறுத்தப் பட்டிருக்கிறது' என்றார்கள். துதிக்கையின் பொய்த் தோற்றத்தை மாத்திரங் கண்ட மற்றொரு கிராமத்தவர்கள், 'உரல் இல்லை; அது உலக்கை' என்றார்கள். வேறொரு கிராமத்தவர்கள் — காதின் பொய்த் தோற்றத்தை மாத்திரங் கண்டவர்கள் — 'அது உரலும் இல்லை; உலக்கையுமில்லை; அது சுளகுதான்' என்றார்கள். அவர்களுக்குள்ளே பெரிய கலகம் உண்டாய்விட்டது; தீராத கலகம்.

அந்தக் கிராமங்களில் உள்ள சில புத்திமான்கள், உரல், உலக்கை, சுளகு ஆகிய தோற்றங்களை ஆராய்ந்து, அந்தப் பொய்த் தோற்றங்களுக்கு மூலமாயிருந்த, கால் — கை — காது என்கின்ற மெய்ப் பொருள்களைக் கண்டுபிடித்தார்கள். அவர்கள் அவ்வளவிலும் நில்லாமல் மேலும் ஆராய்ந்து, யானையின் மேலிருந்த பாகனைச் சந்தித்து, தாம் முன்கண்ட கால் — கை — காது என்பவைகள், ஒரு முழுப் பொருளின் உறுப்புக்கள் என்பதை உணர்ந்து, முழுப் பொருளாகிய யானையைக் கண்டு, ஒருவரை ஒருவர் கொண்டாடிக் குதூகலித்தார்கள்.

நாம் காணுகின்ற இந்தப் பிரபஞ்சத் தோற்றத்தை மெய்ப் பொருளென்று கொண்டாடுகிறவர்கள், யானையின் உறுப்புக்களை உரலென்றும் உலக்கையென்றும் சுளகென்றும் கண்டவர்கள் போன்றவர்களே; இவர்கள் பொய்ச் சமயிகள்; புறச் சமயிகள்; தீராத கலகக் காரர்கள்.

பிரபஞ்சத் தோற்றங்களை ஆராய்ந்து, அவற்றின் மூலங்களாகிய மெய்ப் பொருளைக் காணுகிறவர்கள், யானையின் உறுப்புக்களாகிய கால், கை, காதுகளை

உள்ளபடி கண்டவர்கள் போன்றவர்கள்; அவர்களே மெய்ச் சமயிகள்; அகச் சமயிகள்.

யானையின் உறுப்புக்களைக் கண்டவர்கள் மேலும் ஆராய்ந்து யானையின் முழு உருவத்தைக் காணுவது போல, அகச்சமயிகளும் தத்தஞ் சமயநெறிவழிச் சென்று ஆராய்ந்து முழு உண்மையைக் காணுவார்கள். அகச் சமயிகளுக்குட் கலகமில்லை;கலந்து கொண்டாடுவார்கள்.

பொய்த் தோற்றத்துக்கு மூலம் மெய்த் தோற்றம். பொய்த் தோற்றம், மெய்த் தோற்றமும் அன்று; அதில் வேறுனதுமன்று.

தோன்றுகின்ற பிரபஞ்சம், கடவுளும் அன்று; கடவுளில் வேறுனதுமன்று.

பிரபஞ்சத்தைக் காணுகின்ற ஆத்மாவும் கடவுளுமன்று; கடவுளில் வேறுனதுமன்று.

இப்படிப்பட்ட நிலைக்கு 'அத்துவிதம்' என்று பெயர்.

இந்த உலகமும் உயிரும் கடவுளோடு அத்துவிதப்பட்டிருக்கின்றன.

இந்த அத்துவித நிலையை, பொய்த்தோற்றங்களைக் கண்டு மயங்காது, மெய்யாகவே—புனிதமாகவே—கண்டவர் மெய்கண்டார்.

"*பொய்கண்டார் காணுப் புனிதமெனும் அத்துவித*
*மெய்கண்டார்*" என்று வாயூறுகின்றுர் தாயுமானவர்

மெய்கண்டாரின் பிள்ளைத்திருநாமம் சுவேதவனப் பெருமாள். இவர் திருவெண்ணெய்நல்லூரில் அவதரித்தார்; திருவருட்சார்பினுலே, பாலொழுகும் பராயத்திலேயே, திருஞானசம்பந்தப்பிள்ளையார் போலவே, புனிதமான அத்துவித மெய்கண்டாராயினுர்.

மெய்கண்டார் தாங் கண்ட அத்துவித உண்மைகளை, ஒரு சிறு குழந்தையின் உள்ளங்கையில் எழுதிக் காட்டக்கூடிய, சின்னஞ்சிறிய பன்னிரண்டு சூத்திரங்கள் மூலம் போதித்தருளியிருக்கின்றுர். அந்தப் போதனைக்குச் சிவஞானபோதம் என்று பெயர். அதிலிருந்து சித்தித்ததுதான் சிவஞான சித்தியார். அதிலிருந்து பிரகாசித்தது சிவப்பிரகாசம். இவை மூன்றும் மும்மலங்களையும் போக்கும் மூன்று மணிகள்.

மெய்கண்டதேவர் திருவடி வாழ்க!

# கந்தபுராண சாரம்

மனிதன் இந்தச் சரீரம் கிடைத்ததன் நோக்கத்தை விசாரியாது, பற்றுக்களுக்கு அடிமையாய்விட்டான்; வெகு தூரம் பற்றுக்களுக்குப் பிறகே போய்விட்டான். அதனாலே, தன் கருத்துக்களைக் கடவுளின் கருத்துக்கள் — கடவுளுக்கு உடன்பாடானவைகள் — என்று சொல்லவுந் தொடங்கிவிட்டான்.

பற்றுக்களை அடக்க முடியாது; அவை தாமே அடங்கவேண்டும். அதற்கு ஒரேஒரு உபாயம், பற்றுக்களைத் தர்மவழியிலே வழிப்படுத்துவது. தருமமாவது திருவருட் குறிப்பு. அது வேதாதிகளிற் பேசப்பட்டது.

தர்மம் மிகமிக நீளமானது. அதன் இறுதி மோக்ஷம். மோக்ஷமாவது மெய்ச்சார்பை உணர்ந்து, பொய்ச்சார்புகள் விடுபட ஒழுகுவது. தர்மம் இந்த நிலைக்கு வந்து முற்றுப்பெறுமானால், அந்த நிலைக்கு அறம் என்று பெயர்.

அறமாவது திரிகரணசுத்தி. 'மனத்துக்கண் மாசிலனாதல்.'

'புன்னெறி யதனிற் செல்லும் போக்கினை' விலக்குதல் தர்மம். 'மேலாம் நன்னெறி ஒழுகல்' அறம். அறங் கைவந்து மனந் தூயர் ஆனவர்களுக்குப் பொருள் தெரியும். பொய்ம்மை இது, மெய்ம்மை இது என்று அறிவார்கள். உலகம் அவர்கள் உள்ளங்கைக்கு வந்து

விடும். உண்மையைக் காண்பார்கள். அவர்களுடைய காட்சி 'நவையறுகாட்சி'. நவை – குற்றம்.

நவையறு காட்சி கைவந்து மெய்ப்பொருள் தெரிந்தவர்கள், அப்பொருளைப் பிரிந்துவாழ இயலாதவர்களாய், அப்பொருளோடு ஒன்றுபடுகின்றார்கள். அதற்கு 'மீளா அடிமை' ஆகின்றார்கள். அதனை அனுபவிக்கின்றார்கள். அதுதான் ஒப்புயர்வில்லாத இன்பம்.

இன்பந் தலைப்பட்டவர்கள், சுவர்க்காதி பயன்களைத் தருகின்ற நல்வினைகளையும், தீவினைகளோடு ஒப்ப மதித்து வெறுக்கின்றார்கள். அவர்களுக்கு 'இருவினை ஒப்பு' உதிக்கின்றது; வீடு தலைக்கூடுகின்றது. நாடலைப்படுகின்றார்கள்.

அறம் பொருள் இன்பம் வீடு, அரும்பு மலர் காய்கனி. அறத்துக்கு மூலந் தர்மம். தர்மத்துக்கு வெகு தூரத்திலுள்ளவைகள் பற்றுக்கள். பற்றுக்கள் எண்ணிறந்தவைகள். ஒவ்வொரு நரம்புத் துய்க்கும் ஒவ்வொரு பற்றுச் சொல்லலாம்.

சூரபத்மா முதலிய அசுரர்கள் 'தர்மம் என்று ஒரு பொருள் உளது' என்பதை உணராது, பற்றுக்களின் வழியில் முழுகிக் குதிக்கின்றார்கள்.

இந்திரன் முதலிய தேவர்கள் — தக்ஷப்பிரசாபதியை உள்ளிட்டவர்கள் — அப்பாற் சென்றுகொண்டு இருப்பவர்களேயாயினும், இடையிடையே தர்மத்தை விலகிப் பற்றுவழிப்பட்டுத் தவிக்கின்றார்கள்.

ஜனகாதி முனிவர்கள் 'சார்பு உணர்ந்து சார்பு கெட' ஒழுகுவதில் நிலைக்கும்பொருட்டுக் கல்லால விருக்ஷ நிழலில் அறங் கேட்கின்றார்கள்.

பிரம விஷ்ணுக்கள் சில சமயங்களில் அறத்தை விலகிப் பொருள் தலைப்படாமல், அடிமுடி தேடி, மெய்ப் பொருள் காண முயலுகின்றார்கள்.

வள்ளிநாயகியார் பொருள் உணர்ந்து, மெய்ப் பொருளோடு ஒன்றுபட்டு, ஐம்புல வேடர்களை விலகி இன்பந் தலைக்கூடுகின்றார்.

தெய்வநாயகியார் இன்பந் தலைக்கூடித் தாடலைப் பட்டு, 'நான்பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்.' என்றநிலை முற்றுப்பெற்று,

'*ஊருணி உற்றவர்க்கு ஊரன் மற்று யாவர்க்கும்* ஊதியம்' என்கின்ற முடிந்த அன்புத்துறை நிறைவு ஆகி, திருவருள் வெள்ளமாய்ப் பிரவாகிக்கின்றார்.

சிவம் இருந்தபடி இருக்கச் சிவசத்தியின் சந்நிதியில் ஆத்மாக்கள் பற்றுக்கள் தொடக்கம் வீடு இறுதியான நிலைகளிற் சஞ்சாரஞ் செய்கின்றன.

*    *    *    *

இவ்வாற்றால், சூரபத்மாமுதல் தெய்வநாயகியார் இறுதியான பாத்திரங்களையும், இன்னும் எத்தனையோ எண்ணிறந்த பாத்திரங்களையுந் தன்பாற்கொண்ட **கந்த புராணம்** என்கின்ற தேவகங்கை, ஆத்மாக்களின் செல்கதியைப் பேசுவதாய், அவைகளை அவ்வக் கதிகளிற் செலுத்துவதாய், ஒப்பு உயர்வு இன்றி விளங்குகின்றது.

*    *    *    *

*இத்துணைப் பெருமையிற் சிறந்த* கந்தபுராணம், இப்பூவுலகத்திலே நாவலந் தீவிலே பாரத வருஷத்திலே பரதகண்டம் என வழங்குகின்ற குமரி கண்டத்திலே மிக்குப் பயின்று வழங்கியதொரு க்ஷேத்திரம் உண்டு என்றால், அந்தப் புண்ணிய க்ஷேத்திரம் இந்த **யாழ்ப்பாணமே.**

ஒருகாலத்திலே இந்த யாழ்ப்பாணத்திலுள்ள ஆட்வர்கள், மகளிர்கள், முதியவர்கள், இளையவர்கள் ஆகிய எல்லாருடைய இரத்தத்திலுங் கலந்து, நரம்புத் துய்கள் தோறும் ஊறிச் சுரந்துகொண்டிருந்தது **கந்த புராணம்.**

இதனாலே, யாழ்ப்பாணத்திலே அந்நிய கலாசாரங்கள் — மிலேச்ச கலாசாரங்கள் — ஊற்றெடுத்தல் ஆற்ருது, தாமரையிலையில் நீர்போல் உருண்டு புரண்டு சாக்கடையில் ஓடுவ ஆயின.

* * * *

ஆனால், இப்பொழுது கல்வி முதலிய பல்வேறு துறைகளில் யாழ்ப்பாணம் போகிற போக்கைத் தலை குனிந்து பார்த்தால்,

இனி,

**"மையார் களத்தார் வரம்பெற்ற சூரனுக்குச்**
**செய்யாத ஏவல்எலாம் செய்தோம் நெறிநீதி**
**எய்யாத மானம் இவையெல்லாந் தானிழந்தோம்**
**ஐயா மிகவும் அலுத்தோம் அலுத்தோமே"**

என்ற பாடலை முகாரி இராகத்திற் பாடி, சுரம்பண்ணிக் கொண்டிருக்கத்தான் நேரும் போலும்.

# பண்டிதமணி கணபதிப்பிள்ளையவர்கள்

## பாராட்டு.

(திரு. கி. வா. ஜகந்நாதன் அவர்கள், ஆசிரியர், "கலைமகள்.")

(1)

உருவத்தால் நெடியான்; ஓங்கும்
உள்ளத்தால் நெடியான்; பண்பார்
பருவத்தால் முதிர்ந்தான்; ஞானப்
பத்தினிலும் முதிர்ந்தா னேனும்
கருவத்தான் அல்லன்; நாமம்
கணபதிப் பிள்ளை என்பான்;
மருவத்தான் அன்பின் மிக்கான்
மதிநலம் மொழியற் பாற்றே?

(2)

சைவஆ சிரியர் தேர்ச்சி
சாலுங்கல் லூரி தன்னில்
தைவரும் தமிழைக் கற்பித்
துயர்புகழ் தாங்கி நின்றான்;
மெய்வரும் எழுத்தில் பேச்சில்
விளக்கமாய் உரைசொல் பொற்பில்
கைவரும் திறத்தான், எங்கள்
கணபதிப் பிள்ளை யன்றோ?

(3)

துண்டவெண் பிறைஅ ணிந்த
சுடர்முடி இறைவன் தாளில்
மண்டிய அன்பு வைத்த
மனத்தினன்; இலங்கை நாட்டில்
பண்டித மணிஇன் னுன்காண்,
பரவுமின் என்னப் போற்றும்
திண்டிறற் புலவன்; யாரும்
சிறப்புச்செய் மதிப்புப் பெற்றான்.

[ மறுபக்கம் பார்க்க ]

(4)

அடுக்குறக் கருத்துச் சான்ற
அமுதநல் லுரையை யாற்றி
எடுக்குறும் பொருள்வி ளக்கும்
இணையிலா சிரியன்; சான்றோர்
அடுக்கும்நல் அவையத் தேதன்
அறிவுடை விளக்கம் காட்டி
மிடுக்குறு புலமை நாட்டும்
வித்தகன் இவனே காண்மின்.

(5)

பணைபதி யாகப் பல்லோர்
பரந்தும் என்? தொண்டில் வல்ல
குணபதி யாவார் தம்மைக்
குவலயம் போற்றும்; ஈழக்
கணபதிப்பிள்ளை என்னும்
கவின்றமிழ்ப் புலவ ரேற்றுக்
கிளைபதி வறவே சொல்ல
இலங்கையில் யாவ ருண்டே?

(6)

ஏந்திய அன்பில் சாந்த
இயல்பினில் ஆவைப் போல்வான்;
தீந்தமிழ்த் தேனை உண்ணும்
திறத்தினில் வண்டு போல்வான்;
போந்தமெய் நாட்டுங் காளைப்
பொலியடற் சிங்கம் போல்வான்;
காந்தமே போல்வான் மாணாக்
கர்குழு வினுக்கே அம்மா!

(7)

பெறுபல பண்பு சான்ற
பெட்பினோன் கணப திப்பேர்
உறுசிவ னடியான், தண்ணந்
தமிழினுக் குருவ மானான்;
மறுவறு சான்றோன், தில்லை
மணிமன்றுள் நடனம் செய்யும்
இறைவன்இன் அருளால் பல்லாண்
டேற்றமுற் றோங்கி வாழி!

திருமகள் அழுத்தகம், சுன்னாகம்